Source: *Tamil Murasu,* p1
Date: 24 November 2021

புதிய வடிவ குழு மனப்பான்மை இங்கு வேரூன்றும் அபாயம்

கவனம் இல்லையெனில் நமது அரசியல் பாதிக்கப்படும்: வோங்

சிங்கப்பூரில் நிகழ்ந்த ஆக மோச மான இனவாதம் தொடர்பான சம்பவம் என்று சிங்கப்பூரர்கள் பல ரும் நினைவுகூர்வது 1964 இனக் கலவரங்களைத்தான். சீனர்களுக் கும் மலாய்க்காரர்களுக்கும் இடை யில் அப்போது நிகழ்ந்த மோதலில் 36 பேர் உயிரிழந்ததோடு 560 பேர் காயமடைந்தனர்.

ஆயினும், இதைவிட மோசமாக 1854ல் சீன குல வழிப் பிரிவுகளான ஹொக்கியன், டியோ சீ குலங்க ளுக்கிடையில் கலவரம் மூண்டு, பத்து நாட்களுக்கு மேல் அது நீடித் தது. 400 பேர் மாண்டனர், பலர் காயமடைந்தனர், 300க்கும் மேற் பட்ட வீடுகள் கொளுத்தப்பட்டன.

இதுபோன்ற வரலாற்றுபூர்வ சம்பவங்களை நினைவுகூர்ந்த நிதி அமைச்சர் லாரன்ஸ் லோங், "தற் போது நாம் அனுபவித்து வரும் நல்லிணக்கம் மிகவும் உறுதியா னது என்றோ அது நிரந்தரம் என்றோ கருதிவிடலாகாது," என் றார்.

கொள்கை ஆய்வுக் கழகமும் எஸ்.ராஜரத்தினம் அனைத்துலகப் பள்ளியும் ஏற்பாடு நேற்று செய்தி ருந்த கருத்தரங்கில் பங்கேற்று திரு வோங் உரையாற்றினார். வளர்ந்து வளரும் புதிய வடிவிலான குழு மனப்பான்மை, அடையாள அரசி யல்-சிங்கப்பூரை இவை எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பற்றி கருத்த ரங்கு விவாதித்தது.

"மேற்கத்திய நாடுகளில் தொடங்கிய கலாசாரப் போர் இங்கு ஏற்கெனவே புதிய வடிவிலான அடையாள அரசியலை உருவாக் கியுள்ளது. இன, சமய பிரிவினை களுக்கு அப்பால் அது இங்கு வந் துள்ளது. நாம் கவனமாக இல்லா விட்டால் புதிய வடிவிலான குழு மனப்பான்மை இங்கு எளிதாக வேரூன்றிவிடும். அதன் பிறகு நமது அரசியல்கூட புதிய அடையாளப் பிரச்சினைகளால் வரையறுக்கும் நிலை உருவாகிவிடும்," என்று எச்சரித்தார் திரு வோங்.

பாலின அடையாளம், இனம், அரசியல் நிகழ்ச்சிகள் போன்ற கலாசார விவகாரங்கள் தொடர் பாக வெவ்வேறு சமூகக் குழுக் களுக்கு இடையில் நிகழும் பூச லைக் குறிப்பிட்டு அவர் பேசினார்.

பலவித குழு அடையாளங்கள் கலந்த தேசமாகவே சிங்கப்பூர் எப் போதும் இருந்துவருவதாகக் குறிப் பிட்ட அமைச்சர், குறிப்பாக, மூன்று வித நாகரிங்களை உள்ளடக்கிய தாக இது உள்ளது. சீனா, இந்தியா ஆகிய ஆசிய நாகரிகங்களுடன் தென்கிழக்காசிய நாகரிகமும் இதில் இணைந்துள்ளது என்றார் திரு வோங். வெவ்வேறு இனங் களும் வெவ்வேறு சமயக் குழுக் களும் நல்லிணக்கத்துடன் இங்கு வாழும் முறை திடீரென ஏற்பட்ட தல்ல என்றும் அவர் கூறினார்.

அரசியலைப் பாதிக்காதிருக்க 5 அணுகுமுறைகள்

கொள்ளைநோய் பரவல் காலத்தில் உருவான கருத்து வேற்றுமைகள் நமது அரசியலைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு நிரந்தரப் பிரிவினையை ஏற்படுத்த நாம் அனுமதித்துவிடக் கூடாது என்று திரு வோங் கூறி னார்.

"அதிகப் பன்முகத்தன்மை வாய்ந்த சமூகத்தை நாம் பெற்றி ருக்கிறோம். அத்துடன் சிங்கப்பூரர் என்னும் அடையாளம் முன்னைவிட வலுவாக உள்ளது," என்ற அவர், நாட்டின் ஒற்றுமையையும் நல்லி ணக்க சமூகத்தையும் பராமரிக்கும் அதேநேரம் பல்வேறு அடையாளக் குழுக்களின் தேவைகளைச் சமா ளிப்பதில் சரிசம நிலையைக் கடைப் பிடிக்க ஐந்துவித அணுகுமுறை களைப் பட்டியலிட்டார்.

1. மக்களுக்கு இடையிலான ஒற்றுமையை வலுப்படுத்துதல்: அன் றாட இருவழித் தொடர்புகள் மூலம் மனித உறவுகளைப் பலப்படுத்து வது முதல் வழி.

இவ்வாறு செய்வதன் மூலம் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையை வளர்க்கலாம். சமூக ஒற்றுமைக்கு அது உதவும்.

2. ஒரே மாதிரியான குழுக்களை தவிர்த்தல்: ஒரே மாதிரியான மக் கள் குழுக்கள், ஒரே மாதிரியான சமூகம் என்று நம்புவது போன் றவை தொடர்பில் அமைச்சர் எச்ச ரிக்கை விடுத்தார்.

இதுபோன்ற அம்சங்களில் சிறு பான்மைக் குழுக்கள் சம்பந்தப்ப டுகிறார்கள்.

எனவே தங்கள் வசம் உள்ள ஒரே மாதிரியான தன்மை உள்ள வர்கள் பற்றி சிங்கப்பூரர்கள் அதி கக் கவனத்துடன் இருக்க வேண் டும்.

3. நமது இயல்பின் சிறப்பை வரை தல்: சிங்கப்பூர் முன்னேறும் விதத் திற்கு உதாரணமாக வர்த்தக மைய மாக சிங்கப்பூர் உருவான வர லாற்றை திரு வோங் சுட்டினார்.

வர்த்தகம் என்பது இருதரப்பு மரபுகள், நம்பிக்கை மற்றும் பரஸ் பர நன்மை ஆகியவற்றின் அடிப்ப டையில் உருவாவது.

நீண்டகால இருதரப்பு வெற் றியை உருவாக்குவதன் மூலமே ஆற்றலுடன் வர்த்தகம் புரிய முடி யும் என்றார் அவர்.

4. எல்லாருடைய நல்வாழ்வுக்கும் நம்பிக்கையையும் வாய்ப்பையும் ஏற்படுத்துதல்: சிங்கப்பூர் தனது எல்லாக் குடிமக்களின் நல்வாழ்வுக் கும் நியாயமான வாய்ப்பையும் நம் பிக்கையையும் வழங்குவதைத் தொடர வேண்டும்.

5. நியாயமான, நேர்மையான ஊழி யனாக அரசு விளங்குதல்: வெவ் வேறு குழுக்களுக்கு இடையில் ஒரு நியாயமான, நேர்மையான தரகராக அரசாங்கம் செயல்பட வேண்டும் என்றார் திரு வோங்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.